भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

**नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका**

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

*புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக*


---

The translation in Tamil of The Interest Tax Act, 1974 (45 of 1974), The Hindu Gains of Learning Act, 1930 (30 of 1930) The Government Seal Act, 1862 (3 of 1862), The Foreigners Act, 1946 (31 of 1946), The Agricultural Produce Cess Act, 1940 (27 of 1940), The Protection of Human Rights Act, 1993 (10 of 1994), The Prevention of Corruption Act, 1988 (49 of 1988), The Cess and Other Taxes on minerals (Validation) Act, 1992 (16 of 1992), The Architects Act, 1972 (20 of 1972) The Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973), The Benami Transactions (Prohibition) Act, 1988 (45 of 1988) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

வட்டிவரிச் சட்டம், 1974 (45/1974), இந்துக் கல்விவழி ஈட்டியச் சொத்துச் சட்டம், 1862 (30/1862), அரசாங்க இலச்சினைச் சட்டம், 1862 (3/1862), அயல்நாட்டினர் சட்டம், 1946 (31/1946), வேளாண் விளைபொருள் மேல்வரிச் சட்டம், 1940 (27/1940), மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (10/1994), ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (49/1988), கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிறவரிகள் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) சட்டம், 1992 (16/1992), கட்டடக் கலைஞர்கள் சட்டம், 1972 (20/1972), அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973), பெயரிரவல் நடவடிக்கைகள் (தடைசெய்தல்) சட்டம், 1988 (45/1988) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியானவாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 52.00

# மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993

(சட்ட எண் 10/1994)

[1994, ஜனவரி 8]

தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒன்றையும் மாநிலங்களில் மாநில மனித உரிமைகள் ஆணையங்களையும் அமைப்பதற்கும் மற்றும் மனித உரிமைகளைத் திறம்படப் பாதுகாப்பதற்கும் அத்துடன் தொடர்புற்ற அல்லது சார்வுறுபான பொருட்பாடுகளுக்கு வகைசெய்வதற்குமானதொரு சட்டம்.

இந்திய குடியரசின் நாற்பத்து நான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.

## அத்தியாயம் I

### முன்னுரிமை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 என்ற வழங்கப் பெறும்.

(2) இது இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்;

வரம்புரையாக: ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்துகிறவாறான அரசமைப்பின் இணைப்புப்பட்டியல் ஏழின் பட்டியல் I அல்லது பட்டியல் IIIஇல் எண்ணிடப்பட்டுள்ள பதிவுகளில் எது பற்றிய பொருட்பாடுகளுடன் அந்த மாநிலம் எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டுமே அதற்குப் பொருந்தும்.

(3) இது, 1993, செப்டம்பர் 28 ஆம் நாளன்று செல்லாற்றல் பெற்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "ஆயுதப்படை" என்பது, கடற்படை, தரைப்படை மற்றும் வான்படை என்று பொருள்படும் மற்றும் ஒன்றியத்தின் பிற ஆயுதப் படை எதனையும் உள்ளடக்கும்;

(ஆ) "தலைமையாளர்" என்பது, ஆணையத்தின் அல்லது நேர்வுக்கேற்ப மாநில ஆணையத்தின் தலைமையாளர் என்று பொருள்படும்;

(இ) "ஆணையம்" என்பது, பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்று பொருள்படும்;

(ஈ) "மனித உரிமைகள்" என்பது, அரசமைப்பின் வாயிலாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அல்லது பன்னாட்டு முத்திரை ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள மற்றும் இந்தியாவிலுள்ள நீதிமன்றங்களினால் செல்லுறுத்தத்தக்க தனி நபரின் உயிர், தன்னுரிமை, சமன்மை, கண்ணியம், ஆகியவை தொடர்பான உரிமைகள் என்று பொருள்படும்;

(உ) ''மனித உரிமைகள் நீதிமன்றம்'' என்பது, பிரிவு 30இன்படி குறித்துரைக்கப்பட்ட மனித உரிமைகள் நீதிமன்றம் என்று பொருள்படும்;

(ஊ) "பன்னாட்டு முத்திரை ஒப்பந்தங்கள்" என்பது, உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான பன்னாட்டு முத்திரை ஒப்பந்தம் என்றும் ஐக்கிய நாட்டுப் பொதுப் பேரவையினால், 1966, டிசம்பர் 16 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளியல், சமுதாய மற்றும் பண்பாட்டு உரிமைகள் மீதான பன்னாட்டு முத்திரை ஒப்பந்தம் என்றும் பொருள்படும்;

(எ) "உறுப்பினர்" என்பது, ஆணையத்தின் அல்லது நேர்வுக்கேற்ப மாநில ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர் என்று பொருள்படும்; மற்றும் தலைமையாளரையும் உள்ளடக்கும்;

(ஏ) "தேசிய சிறுபான்மையினர் ஆணையம்" என்பது, தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 1992இன் பிரிவு 3-இன் படி அமைக்கப்பட்ட தேசிய சிறுபான்மையினர் ஆணையம் என்று பொருள்படும்; 19/1992.

(ஐ) தேசிய பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணையம்'' என்பது, அரசமைப்பின் உறுப்பு 338இல் சுட்டப்பட்டுள்ள பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் என்று பொருள்படும்;

30/1990. (ஒ) "தேசிய மகளிர் ஆணையம்" என்பது, தேசிய மகளிர் ஆணையச் சட்டம், 1990இன் பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட தேசிய மகளிர் ஆணையம் என்று பொருள்படும்;

(ஓ) "அறிவிக்கை" என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(ஔ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

45/1860. (க) "பொதுப்பணியாளர்" என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21 இல் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருக்கும்;

(ங) "மாநில ஆணையம்" என்பது, பிரிவு 21இன்படி அமைக்கப்பட்ட மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒன்று என்று பொருள்படும்.

(2) ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செல்லாற்றலில் இல்லாத சட்டநெறி ஒன்றிற்கான இந்தச் சட்டத்திலுள்ள சுட்டுகை எதுவும், அந்த மாநிலம் தொடர்பாக, அந்த மாநிலத்தில் செல்லாற்றலிலுள்ள நேரிணையான சட்டநெறி ஏதேனுமிருப்பின், அதற்கான சுட்டுகை ஒன்றாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

### தேசிய மனித உரிமைகள் ஆணையம்

3. (1) இந்தச் சட்டத்தின்படி, அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள செயற்பணிகலைப் புரிவதற்கும், மைய அரசாங்கம் தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்று அழைக்கப்பெறும் குழுமம் ஒன்றை அமைத்தல் வேண்டும். தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை அமைத்தல்

(2) ஆணையம்,

(அ) உச்ச நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக இருந்திருக்கின்ற தலைமையாளர் ஒருவர்;

(ஆ) உச்ச நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக இருக்கிற அல்லது இருந்திருக்கின்ற ஓர் உறுப்பினர்;

(இ) உயர் நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதியாக இருக்கிற அல்லது இருக்கின்ற ஓர் உறுப்பினர்;

(ஈ) மனித உரிமைகள் பற்றிய பொருட்பாடுகளில் அறிவினை அல்லது செயல்முறைப் பட்டறிவினை உடைய நபர்களில் இடையே இருந்து அமர்த்தப்படும் இரண்டு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின், தேசிய பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் ஆணையத்தின் மற்றும் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைமையாளர் பிரிவு 12இன் கூறுகள் (ஆ) முதல் (ஓ) வரையுள்ளவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஆற்றுவதற்கு ஆணையத்தின் உறுப்பினர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) செயலர்-தலைவர் ஒருவர் இருப்பார்; அவர் ஆணையத்தின் தலைமை ஆட்சித் துறை அலுவலராக இருப்பார்; மற்றும் ஆணையம் அவருக்கு ஒப்படைவு செய்யலாகும் அதிகாரங்களைச் செலுத்துவார் மற்றும் செயற்பணிகலை ஆற்றிவருவார்.

(5) தில்லி, ஆணையத்தின் தலைமையிடமாக இருக்கும், மற்றும் ஆணையம் மைய அரசாங்கத்தின் முன் ஒப்பேற்புடன் இந்தியாவின் பிற இடங்களில் அலுவலகங்களை நிறுவலாம்.

ஆணையத்தின் தலைமையாளரை யும் பிற உறுப்பினர் களையும் அமர்த்துதல்.

4. (1) தலைமையாளரும் பிற உறுப்பினர்களும் குடியரசுத் தலைவரின் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையினால் அமர்த்தப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: இந்த உட்பிரிவின்படியான அமர்த்துதல் ஒவ்வொன்றும்—

(அ) தலைமை அமைச்சர்—தலைமையாளர்;

(ஆ) மக்களவைத் தலைவர்—உறுப்பினர்;

(இ) இந்திய அரசாங்கத்தின் உள்துறை அலுவற்பாடுகள் அமைச்சகத்தின் பொறுப்பினை வகிக்கும் அமைச்சர் உறுப்பினர்;

(ஈ) மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர்—உறுப்பினர்;

(உ) மாநிலங்கள் அவையில் எதிர்க்கட்சித்தலைவர்—உறுப்பினர்;

(ஊ) மாநிலங்கள் அவையின் துணைத்தலைவர்—உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றின் பரிந்துரைகளைப் பெற்றதன் பின்னர் செய்யப்படுதல் வேண்டும்;

மேலும் வரம்புரையாக: உச்ச நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதி எவரும் அல்லது உயர்நீதிமன்றம் ஒன்றின் அமர்வு தலைமை நீதிபதி எவரும் இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்ததன் பின்னர் அல்லாமல் அமர்த்தப்படுதல் ஆகாது.

(2) தலைமையாளரின் அல்லது உறுப்பினர் ஒருவரின் அமர்த்துதல் எதுவும், குழுவிலுள்ள காலியிடம் எதனின் காரணத்தினால் மட்டுமே செல்லா நிலையதாக ஆகாது.

ஆணையத்தின் உறுப்பினர் ஒருவரை நீக்குதல்.

5. (1) உட்பிரிவு (2) இன் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத் தலைவரால் உச்ச நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டிருக்கும் குறித்தனுப்புகையின் மீது, உச்ச நீதிமன்றத்தினால் இதன்பொருட்டு வகுத்துரைக்கப்படலாகும் நெறிமுறைகளுக்கு இணங்கியவாறு நடத்தப்பட்ட விசாரணையின்மீது தலைமையாளர் அல்லது நேர்வுக்கேற்ப பிற உறுப்பினர் அத்தகைய காரணம் எதன்பேரிலும் நீக்கப்படுதல் வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்த பின்னர், மெய்ப்பிக்கப்பட்ட நெறிபிறழ்ந்த நடத்தை அல்லது திறமின்மை என்ற காரணத்தைக் காட்டி குடியரசுத் தலைவரின் ஆணையினால் மட்டுமே, தலைமையாளர் அல்லது ஆணையத்தின் பிற உறுப்பினர் எவரும், அவரது பதவியில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் எது எவ்வாறிருப்பினும், தலைமையாளர் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய பிற உறுப்பினர்,—

(அ) ஒரு நொடித்துப் நிலையராகத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறார் என்றால்; அல்லது

(ஆ) அவரது பதவிக் காலத்தின்போது, அவரது பதவிக் கடமைகளுக்கு வெளியே செலுத்தப்பெறும் வேலையமர்த்தம் எதிலும் ஈடுபட்டிருக்கிறார் என்றால்; அல்லது

(இ) மனம் அல்லது உடல்தளர்ச்சியின் காரணத்தினால் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராயிருக்கிறார் என்றால், அல்லது

(ஈ) பித்துப்பிடித்தவராக இருக்கிறார் அல்லது தகுதிறமுடைய நீதிமன்றம் ஒன்றினால் அவ்வாறு விளம்பப்பட்டிருக்கிறார் என்றால்; அல்லது

(உ) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கி இருக்கிறதென, குடியரசுத் தலைவர்கருதுகிற குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறார் என்றால்

தலைமையாளரை அல்லது பிற உறுப்பினர் எவரையும் அவரது பதவியில் இருந்து குடியரசுத்தலைவர் நீக்கலாம்.

6. (1) தலைமையாளராக அமர்த்தப்பட்ட நபர் ஒருவர் அவர் பதவியேற்ற தேதியில் இருந்து ஐந்தாண்டுக் காலஅளவு அல்லது அவர் எழுபது வயது நிறைவெய்துகிறவரையில், இவற்றுள் எது முந்தியதோ அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

(2) உறுப்பினராக அமர்த்தப்பட்ட நபர் ஒருவர், அவர் பதவியேற்ற தேதியில் இருந்து ஐந்தாண்டு காலஅளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் மற்றுமொரு ஐந்தாண்டுக் காலஅளவிற்கு மறு அமர்த்தம் செய்யப்படுவதற்கும் தகுமையுடையவர் ஆவார்:

வரம்புரையாக: உறுப்பினர் எவரும் எழுபது வயது நிறைவெய்திய பின்னர் பதவி வகித்தல் ஆகாது.

(3) பதவி வகிப்பது முடிவுற்றதன் பேரில், ஒரு தலைமையாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், இந்திய அரசாங்கத்தின் கீழ் அல்லது மாநில அரசாங்கம் எதனின்கீழ், மேலுமான வேலையமர்த்தத்திற்குத் தகுமையற்றவர் ஆவார்.

7. (1) தலைமையாளரின் இறப்பு, பதவி விலகல் அல்லது பிறவாறான காரணங்களினால் அவரது பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுகின்ற நிகழ்வில், அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்குப் புதிய தலைமையாளர் அமர்த்தப்படும்வரையில், தலைமையாளராகச் செயற்படுவதற்கு உறுப்பினர்களில் ஒருவருக்கு குடியரசுத்தலைவர் அறிவிக்கை வாயிலாக அதிகாரமளிக்கலாம்.

குறித்தசில சூழ்நிலைகளில் உறுப்பினர் தலைமை யாளராகச் செயற்படுதல் அல்லது அவரது செயற்பணிகளை ஆற்றுதல்.

(2) தலைமையாளர் விடுப்பின்பேரிலான இருத்தலின்மை அல்லது பிறவாறான காரணத்தினால் அவரது செயற்பணிகளை ஆற்றுவதற்கு இயலாதிருக்கும்போது, குடியரசுத் தலைவர், தலைமையாளர் எந்தத் தேதியில் அவரது கடமைகளை மீண்டும் மேற்கொள்கிறாரோ அந்தத் தேதி வரையில் தலைமையாளரின் செயற்பணிகளை அத்தகைய உறுப்பினர்களில் ஒருவர் ஆற்றிவருதல் வேண்டும் என்று இதற்கென அரசிதழின் வாயிலாக அதிகாரமளிக்கலாம்.

8. உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் அவர்களின் பிற பணிவரையரைகளும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறபடி இருத்தல் வேண்டும்:

உறுப்பினர்களின் பணிவரையரைகளும் வரைக்கட்டுகளும்

வரம்புரையாக: உறுப்பினர் ஒருவரின் வரையூதியமும் படித் தொகைகளுமோ, பிற பணிவரையரைகளும் வரைக்கட்டுகளுமோ அவர் அமர்த்தப்பட்டதற்குப் பின்னர் அவருக்குப் பாதகமாக இருக்கிறவாறு மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

9. ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், ஆணையத்தில் காலியிடம் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே மறுத்து வாதிடப்படுதலோ செல்லாநிலையதாக ஆக்கப்படுதலோ ஆகாது.

காலியிடங்கள் முதலியன ஆணையத்தின் நடவடிக்கைகளைச் செல்லா நிலையதாக்காது.

10. (1) ஆணையம், தலைமையாளர் பொருத்தமெனக் கருதுகிற நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

ஆணையத்தால் ஒழுங்குமுறைப் படுத்தப் படவேண்டிய நெறிமுறை.

(2) ஆணையம், அதன் சொந்த நெறிமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிபுகளும், செயலர்-தலைவராலோ அல்லது தலைமையாளரால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலுமோ உறுதிச் சான்றொப்பம் இடப்படுதல் வேண்டும்.

ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர் தொகுதியும்.

11. (1) மைய அரசாங்கம்,—

(அ) ஆணையத்தின் செயலர்-தலைவராக இருப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் செயலர் படிநிலையில் உள்ள அலுவலர் ஒருவரையும்,

(ஆ) ஆணையத்தின் செயற்பணிகளைத் திறம்பட புரிவதற்குத் தேவைப்படலாகிற காவல்துறை இயக்குநர் தலைவர் படிநிலைக்குக் கீழ்ப்படாத அலுவலர் ஒருவரின்கீழ் அத்தகைய காவலர் மற்றும் புலனாய்வுப் பணியாளர் தொகுதி மற்றும் அத்தகைய பிற அலுவலர் மற்றும் பணியாளர் தொகுதியையும்

ஆணையத்திற்குக் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

(2) ஆணையம் இதன்பொருட்டு, மைய அரசாங்கத்தினால் வகுக்கப்படலாகும் விதிகளுக்கு உட்பட்டு, ஆணையம், அது தேவையெனக் கருதுகிற நிருவாக தொழில்நுட்ப மற்றும் அறிவியல் பணியாளர் தொகுதியினை அமர்த்தலாம்.

(3) உட்பிரிவு (2)இன்படி அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர் தொகுதியின் வரையூதியம், படித்தொகைகள், பணிவரைக்கட்டுகள் ஆகியவை வகுத்துரைக்கப்படலாகிறபடி இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் III

### ஆணையத்தின் செயற்பணிகளும் அதிகாரங்களும்

ஆணையத்தின் செயற்பணிகள்.

12. ஆணையம், பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் புரிதல் வேண்டும், அவையாவன:-

(அ) தாமே முற்பட்டோ அல்லது பலியானவரால் அல்லது நபர் எவராலும் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றின்பேரில்—

(i) மனித உரிமைகளின் மீறுகைக்கான அல்லது அதில் தலையிட்டுக் குறைத்தலுக்கான அல்லது

(ii) அரசுப் பணியாளர் ஒருவரால் அத்தகைய மீறுகையைத் தடுப்பதில் காணப்பட்ட அசட்டைக்கான

முறையீட்டினை விசாரித்தல்;

(ஆ) நீதிமன்றம் ஒன்றின் முன்னர் முடிவுறாநிலையிலுள்ள மனித உரிமைகள் மீறுகைக்கான சாட்டுரை எதனையும் உள்ளடக்கியுள்ள நடவடிக்கை எதிலும் அத்தகைய நீதிமன்றத்தின் ஒப்பேற்புடன் தலையிடுதல்;

(இ) மருத்துவப்பண்டுவம், சீர்திருத்தம் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக மாநில அரசாங்கத்தின் கட்டாள்கையிலுள்ள சிறைச்சாலை அல்லது நிலையம் எதிலும் எங்கே நபர்கள் காவலில் வைக்கப்படுள்ளார்களோ அல்லது அடைத்து வைக்கப்பட்டுள்ளார்களோ அங்கே உறைபவர்களின் வாழ்க்கை நிலையினைக் கவனமாக ஆராய்வதற்கு அதன்மீது பரிந்துரைகளைச் செய்வதற்கும், மாநில அரசாங்கத்திற்குத் தகவல் அளித்துவிட்டுப் பார்வையிடுதல்;

(ஈ) அரசமைப்பினாலோ அதன் வழியாலோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ, மனித உரிமைகளின் பாதுகாப்பிற்காக வகைசெய்யப்பட்டுள்ள காப்பணைவுகளை மறு ஆய்வுசெய்தல்; மற்றும் அவற்றைத் திறம்பட செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்தல்;

(உ) வன்முறைச் செயல்கள் உள்ளடங்கலாக, மனித உரிமைகள் நுகரப்படுவதைத் தடுத்து நிறுத்துகின்ற பொருட்கூறுகளை மறுஆய்வு செய்தல் மற்றும் தீர்வழிக்கான உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்தல்;

(ஊ) மனித உரிமைகள் மீதான உடன்படிக்கைகள் மற்றும் பிற பன்னாட்டு முறையாவணங்களைக் கவனமாக ஆராய்தல்; மற்றும் அவை திறம்பட செயற்படுத்துவதற்குப் பரிந்துரைகளைச் செய்தல்;

(எ) மனித உரிமைகள் பற்றிய துறையில் ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல் மற்றும் மேம்படுத்துதல்;

(ஏ) மனித உரிமைகள் பற்றிய கல்வியைச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களிடையேயும் பரப்புதல்; மற்றும் இந்த உரிமைகளின் பாதுகாப்பிற்குக் கிடைக்கத்தக்க காப்பணைவுகள் பற்றி விழிப்புணர்வினை வெளியீடுகளின், மக்கள் தொடர்பு சாதனங்களின் கருத்துரங்குகளின் மற்றும் கிடைக்கக்கூடிய பிற வழிமுறைகளின் வாயிலாக மேம்படுத்துதல்;

(ஐ) மனித உரிமைகள் பற்றிய துறைகளில் பணிபுரிந்து வரும் அரசாங்கச் சார்பில்லா அமைவணங்களின் மற்றும் நிறுவனங்களின் முயற்சிகளை ஊக்குவித்தல்;

(ஒ) மனித உரிமைகளின் மேம்பாட்டிற்கு அது தேவையென கருதுகிற பிற செயற்பணிகள்.

விசாரணைகள் தொடர்பான அதிகாரங்கள்.

13. (1) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான முறையீடுகளை விசாரணை செய்கையில், உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டம், 1908இன் படி உரிமை
45/1906 வழக்கு ஒன்றினை விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அதிகாரங்கள் அனைத்தையும் மற்றும பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்து குறிப்பாக—

(அ) ஆணை மொழியின் பேரில் சாட்சிகளை வருமாறு செய்வித்தல் மற்றும் ஆணை மொழியின் பேரில் அவர்களை விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக் கொணர்தல் மற்றும் முன்னிலைப்படுத்துதல்

(இ) ஆணையுறுதி ஆவணத்தின் பேரில் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளுதல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதனிடமிருந்தும் பொதுப் பதிவணத்தை அல்லது அதன்படி எதனையும் கோரிப் பெறுதல்;

(உ) சாட்சிகளை விசாரிப்பதற்கு அல்லது ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக பணிக்கிற ஆணைகளை வழங்குதல்;

(ஊ) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும், ஆகியவற்றையும் உடையதாக இருக்கும்.

(2) ஆணையம், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும்
45/1860 அந்த நபரால் கோருரிமை செய்யப்படலாகும் சிறப்புரிமை எதற்கும் உட்பட்டு, விசாரணையின் உறுபொருளுக்குப் பயனுள்ளதாக அல்லது அத்துடன் தொடர்புடையதாக இருக்கிறதென்று ஆணையம் கருதுகிற அத்தகைய பிரச்சினைகள் அல்லது பொருட்பாடுகள் மீதான தகவலை அளிப்பதற்காக நபர் எவரையும் வேண்டுறுத்துவதற்காக அதிகாரத்தை உடையதாக இருக்கும்; மற்றும் அவ்வாறு வேண்டுறுத்தப்பட்ட நபர் எவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 176 மற்றும் 177 இன் பொருளின்படி அத்தகைய தகவலை அளிப்பதற்குச் சட்டமுறையாகக் கட்டுப்பட்டவர் என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஆணையம் அல்லது ஆணையத்தால் இதன் பொருட்டுச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின் படி நிலைக்குக் குறைவாக இல்லாத பிற அலுவலர் எவரும், கூட்டத்திலும் அல்லது விசாரணைக்கான உறுபொருள் தொடர்பான ஆவணம் எதுவும் காணப்படலாகும் என்று ஆணையம் நம்புவதற்குக் காரணம் உடைய இடம் எதிலும் நுழையலாம்;
45/1860 மற்றும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் பிரிவு 100இன் வகையங்கள் எந்த அளவுக்குப் பொருந்துமோ அந்த அளவுக்கு உட்பட்டு ஆவணம் எதனையும் பறிமுதல் செய்யலாம் அல்லது அவற்றிலிருந்து எடுகுறிப்புகளையோ படிகளையோ எடுக்கலாம்.

(4) ஆணையம் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் ஆணையத்தின் பார்வையில் அல்லது முன்னிலையில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 175இல் பிரிவு 178இல், பிரிவு 179இல், பிரிவு 180இல் அல்லது பிரிவு 228இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு குற்றச்செயல் எதுவும் செய்யப்பட்டிருக்கிறபோது ஆணையம் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் வகைசெய்யப்பட்டுள்ளவாறு குற்றச்செயலை உருவாக்கும் பொருண்மைகளும் குற்றச்சார்த்தப்பட்டவரின் வாக்குமூலம் (விவர உரையுடன்) பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அதனை விசாரிப்பதற்கு அதிகாரவரம்புடைய குற்றவியல் நடுவர் ஒருவருக்கு வழக்கினை அனுப்பி வைத்தல் வேண்டும். மற்றும் அத்தகைய வழக்கு எதுவும் எந்தக் குற்றவியல் நடுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோ அந்தக் குற்றவியல் நடுவர், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் பிரிவு 346இன்படி, அந்த வழக்கு அவருக்கு அனுப்பி வைகப்பட்டிருப்பதைப்போன்று, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான முறையீட்டை விசாரிப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

(5) ஆணையத்தின் முன் இருக்கும் நடவடிக்கை ஒவ்வொன்றும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 193 மற்றும் 228இன் பொருளின்படியும் பிரிவு 196இன் நோக்கங்களுக்காகவும் நீதிமுறை நடவடிக்கை ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் ஆணையம் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் பிரிவு 195 இன் மற்றும் அத்தியாயம் XXVIஇன் நோக்கங்கள் அனைத்திற்காகவும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

45/1860

2/1974

புலனாய்வு

14 (1) ஆணையம், விசாரணை தொடர்புற்ற புலனாய்வு எதனையும் நடத்தும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கத்தின் அல்லது நேர்வுக்கேற்ப மாநில அரசாங்கத்தின் ஒருங்கிசைவுடன், மைய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் எதனின் அலுவலர் அல்லது புலனாய்வு முகமை எதனின் பணியத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(2) விசாரணையுடன் தொடர்புற்ற பொருட்பாடு எதனையும் புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காக உட்பிரிவு (1) இன்படி எவரது பணியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த அலுவலர் அல்லது முகமை எதுவும், ஆணையத்தின் பணிப்புரைக்கும் கட்டாள்கைக்கும் உட்பட்டு,—

(அ) நபர் எவரது வருகையையும் அழைப்பாணையிட்டு வருமாறு செய்விக்கலாம், மற்றும் அவரை விசாரணை செய்யலாம்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணரவும் முன்னிலைப்படுத்தவும் வேண்டுறுத்தலாம்; மற்றும்

(இ) அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவணம் அல்லது அதன்படி எதனையும் கோரிப்பெறலாம்.

(3) பிரிவு 15 இன் வகையங்கள், ஆணையத்தின் முன்னர் நபர் ஒருவரால் சான்றளிக்கப்படுகையில் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் எதுவும் தொடர்பாகப் பொருந்துவதைப்போன்று உட்பிரிவு (1) இன்படி எவரது பணியங்கள் பயன்படுத்தப்பட்டனவோ அந்த அலுவலர் எவர் முன்பும் அல்லது முகமை எதன்முன்பும் நபர் ஒருவரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் எதன் தொடர்பாகவும் பொருந்துதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன்படி எவரது பணியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த அலுவலர் அல்லது முகமை எதுவும், விசாரணை தொடர்புற்ற பொருட்பாடு எதனையும் புலனாய்வு செய்தல் வேண்டும்; மற்றும் இதன் பொருட்டு ஆணையத்தால் குறித்துரைக்கப்படலாகும் காலஅளவிற்குள் அதன் மீதான அறிக்கை ஒன்றை ஆணையத்திற்கு மேலனுப்புதல் வேண்டும்.

(5) ஆணையம், தெரிவிக்கப்பட்ட பொருண்மைகளின் சரியான தன்மை குறித்தும் உட்பிரிவு (4) இன்படி அதற்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் இருந்து எட்டப்பட்ட முடிவு எதுவும் இருக்குமாயின் அது குறித்தும் தான் தெளிவுறக்காணுதல் வேண்டும். மற்றும் இந்த நோக்கத்திற்காக ஆணையம் (புலனாய்வினை நடத்திய அல்லது நடத்துவதற்கு உதவிய நபரை அல்லது நபர்களை விசாரணை செய்வது உள்ளடங்கலாக) அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய விசாரணையைச் செய்யலாம்.

15. ஆணையத்தின் முன்னர் சான்றினை அளித்து வருகையில் நபர் ஒருவரால் அளிக்கப்பட்ட விவர அறிக்கை எதுவும், அத்தகைய விவர அறிக்கையில் பொய்ச் சான்று அளித்ததற்கான குற்றவழக்கு ஒன்றைத் தவிர உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதற்கும், அவரை உட்படுத்துதல் ஆகாது; ஆணையத்திலும் நபர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கை

வரம்புரையாக: அந்த விவர அறிக்கையானது,—

(அ) எந்த வினாவிற்குப் பதிலளிப்பதற்கு அவர் வேண்டுறுத்தப் பட்டிருக்கிறாரோ அந்த வினாவிற்கு மறுமொழி தருகையில் அது செய்யப்பட்டிருக்குமாயின்; அல்லது

(ஆ) அந்த விசாரணையின் உறுபொருளுக்குத் தொடர்புடையதாக இருக்குமாயின்,

16. விசாரணையின் எந்த நிலையிலும், ஆணையம்,— குந்தகமாக பாதிக்கப்படக் கூடிய நபர்கள் கேட்கப்படுதல் வேண்டும்.

(அ) நபர் எவரின் நடத்தையை விசாரணை செய்வது தேவையானது என்று அது கருதுமாயின்; அல்லது

(ஆ) அந்த விசாரணையில் நபர் எவரது நற்பெயரும் குந்தகமாக பாதிக்கக்கூடும் என்று அது கருதுமாயின், அந்த விசாரணையில் அந்த நபருக்குக் கேட்கப்படுவதற்கும் அவரது மறுப்புரையில் சான்றினைத் தாக்கல் செய்வதற்கும் தகுமானதொரு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: இந்தப் பிரிவிலுள்ள எதுவும் சான்றுரைஞர் ஒருவரின் நன்மதிப்புக்குப் பழிச்சாட்டு ஏற்படுத்துகிறவிடத்து, பொருந்துதல் ஆகாது.

## அத்தியாயம் IV

### நெறிமுறை

17. மனித உரிமைகள் மீறப்பட்டதற்கான முறையீடுகளை விசாரணை செய்கையில், ஆணையம்— முறையீடுகளை விசாரணை செய்தல்.

(i) மைய அரசாங்கத்திடமிருந்து அல்லது மாநில அரசாங்கம் எதனிடமிருந்தும் அல்லது அதற்குக் கீழமை அமைவனத்தின் பிற அதிகாரி எவரிடமிருந்தும் தகவலை அல்லது அறிக்கையை அதனால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அனுப்புமாறு கேட்டுப் பெறலாம்;

வரம்புரையாக:

(அ) ஆணையத்தினால் நிருணயிக்கப்பட்ட காலத்திற்குள் அந்தத் தகவலோ அறிக்கையோ பெறப்படவில்லை எனின், அந்த முறையீட்டினை அது தாமே விசாரணை செய்ய முற்படலாம்;

(ஆ) தகவலோ அறிக்கையோ பெறப்பட்டதன் பேரில் மேலுமான விசாரணை எதுவும் கோரப்படவில்லை என்றோ அல்லது கோரப்பட்ட நடவடிக்கையானது தொடர்புடைய அரசாங்கத்தினால் அல்லது அதிகாரியால் தொடங்கப்பட்டுள்ளது அல்லது எடுக்கப்பட்டுள்ளது என்றோ ஆணையம் தெளிவுறக்காணுமாயின் அது, முறையீட்டை விசாரணை செய்ய முற்படாமல் அதனை அவ்வாறு முறையீட்டாளருக்குத் தெரிவிக்கலாம்;

(ii) கூறு (i) இல் அடங்கியுள்ள எதற்கும் குந்தகமின்றி, முறையீட்டின் தன்மையைக் கருத்தில் கொண்டு, அது தேவையெனக் கருதுமாயின், விசாரணை ஒன்றைத் தொடங்கலாம்.

18. ஆணையம், இந்தச் சட்டத்தின்படி நடைபெற்ற விசாரணை ஒன்று முடிவடைவதன் பேரில் பின்வரும் நடவடிக்கைகளில் எதனையும் எடுக்கலாம்; அவையானவன:- விசாரணைக்குப் பின்னர் நடவடிக்கைகள்.

(1) அரசுப் பணியாளர் ஒருவரால் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதை அல்லது மனித உரிமைகள் மீறுகையைத் தடுப்பதில் இருந்த அசட்டையை அந்த விசாரணை வெளிப்படுத்தி இருக்குமிடத்து, ஆணையம் தொடர்புடைய அரசாங்கத்திற்கு அல்லது அதிகாரிக்கு குற்றவழக்கிற்கான நடவடிக்கை அல்லது அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பிற நடவடிக்கையானது, தொடர்புடைய நபருக்கு அல்லது நபர்களுக்கு எதிராகத் தொடங்கப்படுவதற்குப் பரிந்துரைக்கலாம்;

(2) உச்ச நீதிமன்றத்தை அல்லது தொடர்புடைய உயர்நீதிமன்றத்தை அந்த நீதிமன்றம் தேவையெனக் கருதுகிற பணிப்புரைகளுக்காக, ஆணைகளுக்காக அல்லது நீதிப் பேராணைகளுக்காக அணுகலாம்;

(3) ஆணையம் தேவையெனக் கருதுகிறவாறு பலியானவருக்கு அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு அத்தகைய உடனடி இடைக்கால தீருதவிக்காக தொடர்புடைய அரசாங்கத்திற்கு அல்லது அதிகாரிக்குப் பரிந்துரைக்கலாம்;

(4) கூறு (5) இன் வகையங்களுக்கு உட்பட்டு, விசாரணை அறிக்கையின்படி ஒன்றை மனுதாரருக்கு அல்லது அவரது சார்பாற்றுநருக்கு வழங்கலாம்;

(5) ஆணையம் அதன் விசாரணை அறிக்கையின் படியுடன் அதன் பரிந்துரைகளையும் சேர்த்துத் தொடர்புடைய அரசாங்கத்திற்கு அல்லது அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்; மற்றும் அந்தத் தொடர்புடைய அரசாங்கம் அல்லது அதிகாரி, ஒரு மாத கால அளவிற்குள் அல்லது ஆணையம் அனுமதிக்கலாகும் அத்தகைய மேலுமான காலத்திற்குள், அந்த அறிக்கையின்மீது எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை உள்ளடங்கலாக அறிக்கை மீதான விளக்கவுரையை அனுப்புதல் வேண்டும்;

(6) ஆணையம், தொடர்புடைய அரசாங்கத்தின் அல்லது அதிகாரியின் விளக்க உரைகள் ஏதேனுமிருப்பின் அதனையும் சேர்த்து அதன் விசாரணை அறிக்கையை மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது தொடர்புடைய அரசாங்கத்தினால் அல்லது, அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கையை வெளியிடுதல் வேண்டும்.

ஆயுதப் படையினர் பொறுத்த நெறிமுறை.

19. (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆயுதப்படை உறுப்பினர்களினால் ஏற்பட்ட மனித உரிமைகள் மீறுகைக்கான முறையீட்டில் நடவடிக்கை எடுக்கையில், ஆணையம் பின்வரும் நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும், அவையாவன—

(அ) அது தாமாக முற்பட்டோ அல்லது, மனு ஒன்று பெறப்படுவதன் பேரிலோ மைய அரசாங்கத்திடமிருந்து அறிவிப்பு ஒன்றினை நாடிப் பெறலாம்;

(ஆ) அறிக்கை பெறப்பட்ட பின்னர், அது, முறையீட்டின்மீது நடவடிக்கை எடுக்கலாம்; அல்லது நேர்வுக்கேற்ப அந்த அரசாங்கத்திற்கு அதன் பரிந்துரைகளைச் செய்யலாம்.

(2) மைய அரசாங்கமா, பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, மூன்று மாதங்களுக்குள் அல்லது ஆணையம் அனுமதிக்கலாகும் மேலுமான காலத்திற்குள் ஆணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) ஆணையம், மைய அரசாங்கத்திற்கு அது செய்துள்ள பரிந்துரைகளுடன் சேர்த்து அதன் அறிக்கையினையும், அத்தகைய பரிந்துரைகளின்மீது அந்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் வெளியிடுதல் வேண்டும்.

(4) ஆணையம், உட்பிரிவு (3) இன்படி வெளியிடப்பட்ட அறிக்கையின் படியொன்றை மனுதாரருக்கு அல்லது அவரது சார்பாற்றுநருக்கு வழங்குதல் வேண்டும்.

ஆணையத்தின் ஆண்டறிக்கைகளும் சிறப்பு அறிக்கைகளும்.

20(1) ஆணையம், மைய அரசாங்கத்திற்கும் தொடர்புடைய மாநில அரசாங்கத்திற்கும் ஆண்டறிக்கை ஒன்றை அனுப்புதல் வேண்டும்; மற்றும், அவசரமானதாக அல்லது முக்கியமானதாக இருக்கிறது என்பதால் ஆண்டறிக்கை அனுப்பப்படும் வரையிலும் காலங்கடத்துதல் கூடாது என்று அது கருதுகிற பொருட்பாடு எதன்மீதும் சிறப்பு அறிக்கைகளை எந்த நேரத்திலும் அனுப்பலாம்.

(2) மைய அரசாங்கம் அல்லது நேர்வுக்கேற்ப மாநில அரசாங்கம், ஆண்டறிக்கைகளையும் சிறப்பு அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் அல்லது நேர்வுக்கேற்ப, முறையே மாநில சட்டமன்றங்களின் முன் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருத்தியுள்ள நடவடிக்கை மற்றும் பரிந்துரைகள் ஏற்கப்படாமைக்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து, வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

# அத்தியாயம் V

## மாநில மனித உரிமைகள் ஆணையம்

21. (1)...... (மாநிலத்தின் பெயர்) மனித உரிமைகள் ஆணையம் என்று அழைக்கப்பெறும் குழுமம் ஒன்றை மாநில அரசாங்கம் அமைக்கலாம். அது அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தும் மற்றும் இந்த அத்தியாயத்தின்படி மாநில ஆணையம் ஒன்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளைப் புரியும். மாநில மனித உரிமை ஆணையங்களை அமைத்தல்.

(2) மாநில ஆணையமானது,—

(அ) உயர்நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதியாக இருந்திருக்கிற தலைமையாளர் ஒருவர்;

(ஆ) உயர்நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி ஒருவராக இருக்கிற அல்லது இருந்திருக்கிற உறுப்பினர் ஒருவர்;

(இ) அந்த மாநிலத்தில் மாவட்ட நீதிபதி ஒருவராக இருக்கிற அல்லது இருந்திருக்கிற உறுப்பினர் ஒருவர்;

(ஈ) மனித உரிமைகள் தொடர்பான பொருட்பாடுகளில் அறிவுடைய அல்லது செயலுறு பட்டறிவுடைய நபர்களில் இடையே இருந்து அமர்த்தப்படவேண்டிய இரு உறுப்பினர்கள்.

ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) மாநில ஆணையத்தின் தலைமை ஆட்சித்துறை அலுவலராக இருப்பதற்குச் செயலாளர் ஒருவர் இருப்பார்; மாநில ஆணையம், அவருக்கு ஒப்படைவு செய்யலாகும் அதன் அதிகாரங்களைச் செலுத்துதலும், செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

(4) மாநில ஆணையத்தின் தலைமையகமானது, மாநில அரசாங்கம் அரசிதழில் குறித்துரைக்கலாகும் அத்தகைய இடங்களில் இருத்தல் வேண்டும்.

(5) மாநில ஆணையம் ஒன்று அரசமைப்பின் இணைப்புப் பட்டியல் ஏழின் பட்டியல் II மற்றும் பட்டியல் IIIஇல் எண்ணிடப்பட்டுள்ள பதிவுகள் எதனுடனும் தொடர்புடைய பொருட்பாடுகள் பொறுத்த மனித உரிமைகளின் மீறுகையை மட்டுமே விசாரணை செய்தல் வேண்டும்:

வரம்புரையாக: அத்தகைய பொருட்பாடு எதுவும் ஆணையத்தினால் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றிலுள்ள சட்டம் எதன்படியும் உரியவாறு அமைக்கப்பட்ட பிற ஆணையத்தினால் முன்னமே விசாரணை செய்யப்பட்டு வருமாயின், மாநில ஆணையம் மேற்கூறப்பட்ட பொருட்பாட்டினை விசாரணை செய்தல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணையம் தொடர்பாக, இந்த உட்பிரிவு "அரசமைப்பின் இணைப்புப் பட்டியல் ஏழின் பட்டியல் II மற்றும் பட்டியல் III என்று சொற்களுக்கும் எண் விவரங்களுக்கும் மாற்றாக ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்துகிறவாறும் அந்த மாநில சட்டமன்றம் விதிகளை வகுப்பதற்கு அதிகாரமுடைய பொருட்பாடுகள் பற்றியதுமான "அரசாமைப்பின் இணைப்புப்பட்டியல் ஏழின் பட்டியல் III" என்ற சொற்களும் எண் விவரங்களும் மாற்றாக அமைக்கப்பட்டு இருந்திருப்பதைபோன்று செல்திறம் உடையதாக இருக்கும்.

22. (1) தலைமையாளரும் [a]பிற உறுப்பினர்களும் ஆளுநரால் அவருடைய கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின் வழி அமர்த்தப்படுதல் வேண்டும்: மாநில ஆணையத்தின் தலைமையாளரையும் பிற உறுப்பினர்களையும் அமர்த்துதல்.

வரம்புரையாக:- இந்த உட்பிரிவின்படியான அமர்த்துதல் ஒவ்வொன்றும்—

(அ) முதலமைச்சர்-தலைமையாளர்;

(ஆ) சட்டமன்றப் பேரவைத் தலைவர்-உறுப்பினர்;

(இ) அந்த மாநிலத்தின் உள்துறைப் பொறுப்பினைப் வகிக்கும் அமைச்சர்-உறுப்பினர்;

(ஈ) சட்டமன்றப் பேரவையின் எதிர்கட்சித் தலைவர்-உறுப்பினர்

ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றின் பரிந்துரைகளைப் பெற்றதன் பின்னர் செய்யப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக: மாநிலம் ஒன்றில் சட்டமன்ற மேலவை இருக்கிறவிடத்து அந்த மேலவையின் தலைவரும், மேலவையின் எதிர்கட்சித் தலைவரும் அந்தக் குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்:

இன்னும் வரம்புரையாக: உயர் நீதிமன்றம் ஒன்றின் அமர்வு நீதிபதி எவரும், அல்லது மாவட்ட அமர்வு நீதிபதி எவரும், தொடர்புடைய மாநில உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்த பின்னர் அல்லாமல் அமர்த்தப்படுதல் ஆகாது.

(2) மாநில வாரியத்தின் தலைமையாளரின் அல்லது உறுப்பினர் ஒருவரை அமர்த்துதல் எதுவும், அந்தக் குழுவிலுள்ள காலியிடம் எதனின் காரணத்தினால் மட்டுமே செல்லா நிலையதாக ஆகாது.

மாநில வாரியத்தின் உறுப்பினர் ஒருவர் நீக்கப்படுதல்.

23. (1) உட்பிரிவு (2)இன் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத் தலைவரால், உச்ச நீதிமன்றத்திற்குச் செயல்பட்டிருக்கும் குறித்தனுப்புகையின் மீது, உச்ச நீதிமன்றத்தினால் இதன்பொருட்டு வகுத்துரைக்கப்படலாகும் நெறிமுறைகளுக்கு இணங்கியவகையில் நடத்தப்பட்ட விசாரணையின் மீது தலைமையாளர் அல்லது நேர்வுக்கேற்ப பிற உறுப்பினர் அத்தகைய காரணம் எதன் பேரிலும் நீக்கப்பட்டாக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்த பின்னர் மெய்ப்பிக்கப்பட்ட நெறியிழந்த நடத்தை அல்லது திறயின்மை என்ற காரணத்தைக் காட்டி குடியரசுத் தலைவரின் ஆணையினால் மட்டு தலைமையாளர் அல்லது ஆணையத்தின் பிற உறுப்பினர் எவரும் அவரது பதவியில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் உள்ள எது எவ்வாறிருப்பினும், தலைமையாளர் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய பிற உறுப்பினர்,—

(அ) ஒரு நொடிப்பு நிலையராகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின்; அல்லது.

(ஆ) அவரது பதவிக் காலத்தின்போது அவரது பதவிக் கடமைகளுக்கு அப்பால் (வெளியே) செலுத்தப் பெறும் வேலைமயமர்த்தம் எதிலும் ஈடுபட்டிருப்பாராயின்; அல்லது.

(இ) மனம் அல்லது உடல் தளர்ச்சியின் காரணத்தினால் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராயிருப்பாராயின், அல்லது

(ஈ) பித்துப் பிடித்தவராக இருப்பாராயின் அல்லது தகுமையுடைய நீதிமன்றம் ஒன்றினால் அவ்வாறு விளம்பப்பட்டிருப்பாராயின், அல்லது.

(உ) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கி இருக்கிறதென குடியரசுத் தலைவர் கருதுகிற குற்றச்செயல் ஒன்றிற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பாராயின்,

அத்தலைமையாளரை அல்லது பிற உறுப்பினர் எவரையும் அவரது பதவியில் இருந்து குடியரசுத் தலைரர் நீக்கலாம்.

மாநில ஆணைய உறுப்பினர்களின் பதவிக்காலம்.

24. (i) தலைமையாளராக அமர்த்தப்பட்ட ஒருவர், அவர் பதவியேற்ற தேதியில் இருந்து ஐந்தாண்டுக் காலஅளவு அல்லது அவர் எழுபது வயது நிறைவெய்துகிற வரையில், இவற்றுள் எது முந்தியதோ அதுவரையில் பதவி வகித்தல் வேண்டும்.

(2) உறுப்பினராக அமர்த்தப்பட்ட ஒருவர், அவர் பதவியேற்ற தேதியில் இருந்து ஐந்தாண்டுக் கால்அளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் மற்றுமொரு ஐந்தாண்டுக் காலஅளவிற்கு மறு அமர்த்தம் செய்யப்படுவதற்கும் தகுமையுடையவர் ஆவார்:

வரம்புரையாக: உறுப்பினர் எவரும் எழுபது வயைது நிறைவெய்திய பின்னர் பதவி வகித்தல் ஆகாது.

(3) பதவி வகிப்பது முடிவுற்றதன்பேரில், ஒரு தலைமையாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், இந்திய அரசாங்கத்தின் கீழோ அல்லது மாநில அரசாங்கம் எதன் கீழுமோ மேலுமான வேலையமர்தத்திற்குத் தகுதியற்றவர் ஆவார்.

25. (1) தலைமையாளரின் இறப்பு, பதவிவிலகல் அல்லது பிறவாறான காரணங்களினால் அவரது பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுகின்ற நிகழ்வில், அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்காகப் புதிய தலைமையாளர் ஒருவர் அமர்த்தப்படும் வரையிலும், தலைமையாளராகச் செயற்படுவதற்கு உறுப்பினர்களில் ஒருவருக்கு அறிவிக்கை வாயிலாக ஆளுநர் அதிகாரமளிக்கலாம். குறித்தசில சூழமைவுகளில் உறுப்பினர் தலைமையாளராக செற்படுதல் அல்லது அவரது செயற்பணிகளை ஆற்றுதல்.

(2) தலைமையாளர் விடுப்பின் பேரிலான இருத்தலின்மை அல்லது பிறவாறான காரணமா அவரது செயற்பணிகளை ஆற்றுவதற்கு இயலாதிருக்கும் போது, ஆளுநர் தலைமையாளர் எந்தத் தேதியில் அவரது கடமைகளை மீண்டும் மேற்கொள்கிறாரோ அந்தத் தேதி வரையில், தலைமையாளரின் செயற்பணிகளை அத்தகைய உறுப்பினர்களில் ஒருவர் ஆற்றி வருதல் வேண்டும் என்று இதன் பொருட்டு அறிவிக்கை வாயிலாக அதிகாரமளிக்கலாம்.

26. உறுப்பினர்களுக்குச் செலுத்தத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் அவர்களின் பிற பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மாநில அரசாங்கத்தினால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்; மாநில ஆணையத்தின் பணிவரையுரைகளும். வரைக்கட்டுகளும்.

வரம்புரயாக; உறுப்பினர் ஒருவரின் வரையூதியமும் படித்தொகைகளுமோ பிற பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளுமோ அவர் அமர்த்தப்பட்டதற்குப் பின்னர் அவருக்குப் பாதகமாக இருக்கும் வகையில் மாற்றப்படுதல் ஆகாது.

27. (1) மாநில அரசாங்கம், மாநில ஆணையத்தின் அலுவலர்களும் பிற பணியாளர் தொகுதியும்.

(அ) மாநில ஆணையத்தின் செயலராக இருப்பதற்கு மாநில அரசாங்கத்தின் செயல்ர ஒருவர் படிநிலைக்குக் கீழ்ப்படாத அலுவலர் ஒருவரையும்;

(ஆ) மாநில ஆணையத்தின் செயற்பணிகளைத் திறம்பட புரிவதற்குத் தேவைப்படலாகிற காவல்துறை இயக்குநர் தலைவர் படிநிலைக்குக்கீழ்ப்படாத அலுவலர் ஒருவரின் கீழ் உள்ள அத்தகைய காவலர் மற்றும் புலனாய்வுப் பணியாளர் தொகுதி மற்றும் அத்தகைய பிற அலுவலர் மற்றும் பணியாளர் தொகுதியையும்—

ஆணையத்திற்குக் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

(2) மாநில ஆணையம், இதன்பொருட்டு, மாநில அரசாங்கத்தினால் வகுக்கப்படலாகும் விதிகளுக்கு உட்பட்டு, அது தேவையெனெனக் கருதுகிற நிருவாக, தொழில்நுட்ப மற்றும் அறிவியற்பணியாளர் தொகுதியினை அமர்த்தலாம்.

(3) உட்பிரிவு (2)இன்படி அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களின் மற்றும் பிற பணியாளர் தொகுதியின் வரையூதியம், படித்தொகைகள், பணிவரைக்கட்டுகள் ஆகியவை வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

28. (1) மாநில ஆணையம், ஆண்டறிக்கை ஒன்றை மாநில அரசாங்கத்திற்கு பணிந்தனுப்புதல் வேண்டும்; மறறும் அவசரமானதாக அல்லது முக்கியமானதாக இருக்கிறது என்பதால் ஆண்டறிக்கை பணிந்தனுப்பப்படும் வரையிலும் காலங்கடத்துதல் கூடாது என்று அது கருதுகிற பொருட்பாடு எதன்பேரிலும் சிறப்பு அறிக்கைகளை எந்த நேரத்திலும் அனுப்பலாம். மாநில ஆணையத்தின் ஆண்டறிக்கை களும் சிறப்பு அறிக்கைகளும்.

(2) மாநில அரசாங்கம், மாநில ஆணையத்தின் ஆண்டறிக்கைகளையும் சிறப்பு அறிக்கைகளையும் மாநிலச் சட்டமன்றம் ஈரவைகளைக் கொண்டிருக்கிறவிடத்து. அதன் அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது அத்தகைய சட்டமன்றம் ஓரவையைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவையின் முன்பும், மாநில ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது எடுக்கக் கருத்தப்பட்ட நடவடிக்கையின் குறிப்புரையுடன் பரிந்துரைகள் ஏற்கப்படாமைக்கான காரணங்கள், எவையேனுமிருப்பின், அவற்றுடன் சேர்த்து வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்துடன் தொடர்புடைய குறித்தசில வகையங்கள் மாநில ஆணையத்திற்குப் பொருந்துதல்.

29. பிரிவுகள் 9,10,12,13,14,15,16,17,18 ஆகியவற்றின் வகையங்கள் மாநில ஆணையம் ஒன்றிற்குப் பொருந்துதல் வேண்டும்; மற்றும் பின்வரும் மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, அவை செல்திறம் உடையதாக இருக்கும். அவையாவன:—

(அ) "ஆணையத்திற்கான சுட்டுகைகள்" மாநில ஆணையத்திற்கான சுட்டுகைகளாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) பிரிவு 10இன் உட்பிரிவு (3) இல் உள்ள "செயலர் தலைவர்" என்ற சொல்லுக்கு மாற்றாக "செயலர்" என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்;

(இ) பிரிவு 12இன் கூறு (ஊ) விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ஈ) பிரிவு 17இன் கூறு (ஊ) இல் உள்ள "மைய அரசாங்கம் அல்லது எவையேனும்" என்ற சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### மனித உரிமைகள் நீதிமன்றங்கள்

மனித உரிமைகள் நீதிமன்றங்கள்.

30. மனித உரிமைகள் மீறப்பட்டதில் இருந்து எழும் குற்றசெயல்களை விரைந்து விசாரணை செய்வதற்கு வகைசெய்யும் நோக்கத்திற்காக மாநில அரசாங்கம் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் ஒருங்கிசைவுடன் மேற்கூறப்பட்ட குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்கு, மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் அமர்வு நீதிமன்றம் ஒன்றை மனித உரிமைகள் நீதிமன்றம் என்று அறிவிக்கை வாயிலாக குறித்துரைக்கலாம்:

வரம்புரையாக: இந்தப் பிரிவிலுள்ள எதுவும்,—

(அ) அமர்வு நீதிமன்றம் ஒன்று ஏற்கனவே சிறப்பு நீதிமன்றம் ஒன்றாக குறித்துரைக்கப்பட்டிருக்கிறது என்றால்; அல்லது

(ஆ) சிறப்பு நீதிமன்றம் ஒன்று ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிறது என்றால்,

அப்போதைக்குச் செல்லாறலிலுள்ள பிற சட்டம் எதன்படியுமான அத்தகைய குற்றச் செயல்களுக்குப் பொருந்துதல் ஆகாது.

சிறப்பு அரசுக் குற்றத்துறை வழக்குரைஞர்.

31. மனித உரிமைகள் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றிற்கும் மாநில அரசாங்கம், அந்த நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்தும் நோக்கத்திற்காக அரசுக் குற்றத்துறை வழக்குரைஞர் ஒருவரை அறிவிக்கை வாயிலாக சிறப்பு அரசுக் குற்றத்துறை வழக்குரைஞராகக் குறித்துரைத்தல் வேண்டும்; அல்லது ஏழாண்டுகளுக்குக் குறையாது வழக்குரைஞர் ஒருவராக தொழிலாற்றி வந்திருக்கிற வழக்குரைஞர் ஒருவரை அமர்த்துதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை.

மைய அரசாங்கத்தின் மானியங்கள்.

32. (1) மைய அரசாங்கம், இதன் பொருட்டு, சட்டத்தின் வாயிலாக நாடாளுமன்றத்தினால் உரிய நிதி ஒதுக்களிப்புச் செய்யப்பட்ட பின்னர், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதற்கு மைய அரசாங்கம் பொருத்தமெனக் கருதுகிற பணத்தொகையை மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான செயற்பணிகளைப் புரிவதற்குப் பொருத்தமெனக் கருதுகிற தொகையினைச் செலவிடலாம்; மற்றும் அத்தகைய தொகை, உட்பிரிவு (1) இல் கட்டப்பட்டுள்ள மானியங்களில் இருந்து செலுத்தப்படத்தக்க செலவினமாகக் கருதப்படுதல் வேண்டும்.

33.(1) மாநில அரசாங்கம், இதன் பொருட்டு சட்டத்தின் வாயிலாக சட்டமன்றத்தினால் உரிய நிதி ஒதுக்களிப்புச் செய்யப்பட்ட பின்னர், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதற்கு மாநில அரசாங்கம் பொருத்தமெனக் கருத்துகிற பணத்தொகையை மானியங்கள் என்ற வகையில் மாநில ஆணையத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

மாநில அரசாங்கத்தின் மானியங்கள்.

(2) மாநில ஆணையம் அத்தியாயம் Vஇன் படியான செயற்பணிகளைப் புரிவதற்குப் பொருத்தமெனக் கருதுகிற தொகையினைச் செலவிடலாம்; மற்றும் அத்தகைய தொகை உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்டுள்ள மானியங்களில் இருந்து செலுத்தப்படத்தக்க செலவினமாகக் கருதப்படுதல் வேண்டும்.

34 (1) ஆணையம், உரிய கணக்குகளையும் தொடர்புற்ற பிற பதிவணங்களையும் வைத்து வருதல் வேண்டும்; மற்றும் இந்தியக் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்வு செய்த பின்னர், மைய அரசாங்கத்தினால் வகுத்துரைக்கப்படலாகிற படிவத்தில் ஆண்டுக் கணக்குகளின் விவரஅறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

கணக்குகளும் தணிக்கையும்

(2) ஆணையத்தின் கணக்குகள் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையரால், குறித்துரைக்கப்படலாகிற கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும். மற்றும் அத்தகைய தணிக்கையின் தொடர்பாக ஏற்பட்ட செலவினம் எதுவும் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையருக்கு ஆணையத்தினால் செலுத்தப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(3) கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையர் மற்றும் இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் அமர்த்தப்பட்ட எவரும், அரசாங்கக் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக கணக்காய்வர்- தலமைத் தணிக்கையர் பொதுவாகப் பெற்றிருக்கும் அதே உரிமைகளை சிறப்புரிமைகளை மற்றும் அதிகாரஅடைவுகளையும் அத்தகைய தணிக்கை தொடர்பாகவும் பெற்றிருப்பர், மற்றும் குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுச் சீட்டுகள், பிற ஆவணங்கள் மற்றும் தாள்கள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தக் கோருவதற்கும் ஆணையத்தின் அலுவலகங்களில் எதனையும் பார்வையிடுவதற்கும் உரிமையுடையவராக இருப்பார்.

(4) கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையரால் அல்லது இதன் பொருட்டு அவரால் அமர்த்தப்பட்ட பிற நபர் எவராலும், உறுதிச்சான்றளிக்கப்பட்டவாறான ஆணையத்தின் கணக்குகள் அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையத்தினால் மைய அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் அனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும், மைய அரசாங்கம் தணிக்கை அறிக்கையினைப் பெற்றதன் பின்னர் கூடிய விரைவில் நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

35. (1) மாநில ஆணையம், உரிய கணக்குகளையும் தொடர்புற்ற பிற பதிவணங்களையும் வைத்துவருதல் வேண்டும்; மற்றும் இந்தியக் கணக்காய்வர் தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்வு செய்த பின்னர் மாநில அரசாங்கத்தினால் வகுத்துரைக்கப்படலாகிற படிவத்தில், ஆண்டுக் கணக்குகளின் விவரஅறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்.

மாநில வாரியத்தின் கணக்குகளும் தணிக்கையும்.

(2) மாநில ஆணையத்தின் கணக்குகள் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையரால், குறித்துரைக்கப்படலாகிற கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தணிக்கைகளின் தொடர்பாக ஏற்பட்ட செலவினம் எதுவும், கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையருக்கு மாநில ஆணையத்தினால் செலுத்தப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(3) கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையர் மற்றும் இந்தச் சட்டத்தின்படி மாநில ஆணையத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் அமர்த்தப்பட்ட எவரும், அரசாங்கக் கணக்குகளைத் தணிக்கை செய்வது

தொடர்பாக கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையர் பொதுவாகப் பெற்றிருக்கும் அதே உரிமைகளை, சிறப்புரிமைகளை மற்றும் அதிகார அடைவுகளை அத்தகைய தணிக்கை தொடர்பாக பெற்றிருப்பர். மற்றும் குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுச்சீட்டுகள், பிற ஆவணங்கள், தாள்கள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தக் கோருவதற்கும் மாநில ஆணையத்தின் அலுவலகங்களில் எதனையும் பார்வையிடுவதற்கும் உரிமையுடையவராக இருப்பர்.

(4) கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையரால் அல்லது இதன்பொருட்டு அவரால் அமர்த்தப்பட்ட பிற நபர் எவராலும் உறுதிச் சான்றளிக்கப்பட்டவாறானது மாநில ஆணையத்தின் கணக்குகள், அதன் தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, மாநில ஆணையத்தினால் மாநில அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் மேலனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் மாநில அரசாங்கம், தணிக்கை அறிக்கையினைப் பெற்ற பின்னர், கூடிய விரைவில் மாநில சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

## அத்தியாயம் VIII

### பல்வகை

ஆணையத்தின் அதிகார வரம்புக்கு உட்படாத பொருட்பாடுகள்.

36. (1) ஆணையம், மாநில ஆணையம் ஒன்றின் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதன்படியும் உரியவாறு அமைக்கப்பட்டுள்ள பிற ஆணையம் எதன் முன்பும் முடிவுறாநிலையிலுள்ள பொருட்பாடு எதனையும், விசாரணை செய்தல் ஆகாது.

(2) ஆணையம் அல்லது மாநில ஆணையம், மனித உரிமைகள் மீறுகையை உருவாக்கும் செயல் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்ற தேதியில் இருந்து ஓராண்டு கழிவுற்றதன் பின்பு, அந்தப் பொருட்பாடு எதனையும் விசாரணை செய்தல் ஆகாது.

சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை அமைத்தல்.

37. அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அரசாங்கம் அவ்வாறு செய்வது தேவையெனக் கருதுகிறவிடத்து, அது, மனித உரிமைகளின் மீறுகையில் இருந்து எழுகின்ற குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்யவும் அதன்மீது குற்றவழக்குத் தொடரும் நோக்கத்திற்கும் தேவையெனக் கருதுகிற அத்தகைய காவல்துறை அலுவலர்களைக் கொண்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை அமைக்கலாம்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

38. இந்தச் சட்டத்தை அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகள் எதனையும் அல்லது ஆணை எதனையும் ஒட்டி அல்லது மைய அரசாங்கம் மாநில அரசாங்கம், ஆணையம் அல்லது மாநில ஆணையத்தின் அதிகாரஅடைவினாலோ அதன் வழியாலோ வெளியிடப்பட்ட அறிக்கை, தாள் அல்லது நடவடிக்கைகளைப் பொறுத்து நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து மைய அரசாங்கத்திற்கு, மாநில அரசாங்கத்திற்கு, ஆணையத்திற்கு, மாநில ஆணையத்திற்கு அல்லது அதன் உறுப்பினர் எவருக்கும், அல்லது மைய அரசாங்கத்தின், மாநில அரசாங்கத்தின் ஆணையத்தின் அல்லது மாநில ஆணையத்தின் பணிப்புரையின்படி செயற்படும் நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

உறுப்பினர்களும் அலுவலர்களும் அரசுப் பணியாளர்கள் ஆவர்.

39. ஆணையத்தின், மாநில ஆணையத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இந்தச் சட்டத்தின்படியான செயற்பணிகளை ஆற்றுவதற்கு ஆணையத்தினால் அல்லது மாநில ஆணையத்தினால் அமர்த்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21இன் பொருளின்படி அரசுப் பணியாளர் ஒருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

40. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு மைய அரசாங்கம் அறிவிக்கை வாயிலாக விதிகளை வகுக்கலாம்.

விதிகளை வகுப்பதற்கு மைய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

(2) குறிப்பாகவும் மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:-

(அ) பிரிவு 8 இன்படி உறுப்பினர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் அவர்களின் பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

(ஆ) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, பிற நிருவாக தொழில்நுட்ப மற்றும் அறிவியல் பணியாளர்-தொகுதி, ஆணையத்தினால் அமர்த்தப்படலாகுமோ அந்த வரைக்கட்டுகள்; மற்றும் பிரிவு 11இன் உட்பிரிவு (3)இன்படி அலுவலர்களின் மற்றும் பிற பணியாளர் தொகுதியின் வரையூதியங்கள் மற்றும் படித்தொகைகள்;

(இ) பிரிவு 13இன் உட்பிரிவு (1)ன் கூறு (ஊ)இன்படி வகுத்துரைக்கப்பட வேண்டுமென வேண்டுறுத்தப்பட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் பிற அதிகாரம் எதுவும்;

(ஈ) பிரிவு 34இன் உட்பிரிவு (1)இன்படி ஆணையத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய ஆண்டுக் கணக்குகளின் விவர அறிக்கைப் படிவம்; மற்றும்.

(உ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகிற பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும் அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத் தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களாகவோ முப்பது நாட்களைக் கொண்டதொரு மொத்தக் கால அளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்கூறப்பட்ட கூட்டத்தொடரினை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக் கொள்ளுமாயின் அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் பெறுதல் வேண்டும்; அல்லது நேர்வுக்கேற்ப செல்திறம் எதுவும் இல்லாதுபோகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

41.(1) மாநில அசாங்கம், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக அரசிதழின் வாயிலாக விதிகளை வகுக்கலாம்.

விதிகளை வகுப்பதற்கு மாநில அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகைசெய்யலாம்; அவையாவன:-

(அ) பிரிவு 26இன்படி உறுப்பினர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் அவர்களின் பிற பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(ஆ) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்ட, பிற நிருவாக, தொழில்நுட்ப மற்றும் அறிவியல் பணியாளர் தொகுதி, மாநில ஆணையத்தினால் அமர்த்தப்படலாகுமோ அந்த வரைக்கட்டுகள்; மற்றும் பிரிவு 27இன் உட்பிரிவு (3)இன்படி அலுவலர்களின் மற்றும் பிற பணியாளர் தொகுதியின் வரையூதியங்கள் மற்றும் படித்தொகைள்;

(இ) பிரிவு 35 இன் உட்பிரிவு (1) இன்படி தயாரிக்கப்பட வேண்டிய ஆண்டுக் கணக்கு விவரஅறிக்கையின் படிவம்.

(3) இந்தப் பிரிவின்படி மாநில அரசாங்கத்தினால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் அந்தச் சட்டமன்றம் ஈரவைகளைக் கொண்டதாக இருக்குமிடத்து அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது அது ஓரவையைக் கொண்டதாக இருக்குமிடத்து அந்த அவையின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

இடர்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

42. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதில் இடர்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாதவாறு, இடர்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையானதாக அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற அத்தகைய வகையங்களைச் செய்யலாம்;

வரம்புரையாக: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் இருந்து இரண்டாண்டு காலஅளவு கழிவுற்ற பின்னர் செய்யப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கறவும் காப்புரையும்.

43. (1) மனித உரிமைகள் பாதுகாப்பு அவசரச் சட்டம், 1993 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.